# பத்திரிக்கை செய்தி

**புதுக்கோட்டை மாவட்ட சிறப்பு திட்ட செயலாக்க அலகில் இளம் நெறிஞர்( Young Professional) பணியிடத்திற்கு விண்ணப்பம் கோருதல்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் மாவட்ட சிறப்பு திட்ட செயலாக்க அலகிற்காக இளம் நெறிஞர் (**Young Professional**) பணியிடத்திற்கு தற்காலிக அடிப்படையில் தொகுப்பூதியத்தில் பணியாற்ற மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவித்துள்ள **செய்தி:**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அவர்களின் அலுவலகத்தில் திட்ட செயலாக்க அலகிற்காக மாவட்ட அளவில் பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்து விரிவான ஆய்வு மற்றும் தரமான தரவுகளை ஆய்வு செய்தல், ஆய்வுகளின் அடிப்படையில் விளக்க காட்சிகள், கொள்கை விளக்கங்களை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களை நிறைவேற்றும் விதமாக இளம் நெறிஞர் பதவிக்கு பணியாற்றிட கணினி அறிவியல்/ தகவல் தொழிநுட்பத்தில் இளங்கலை பொறியியல் மற்றும் தரவு அறிவியல் (Data Science) மற்றும் புள்ளிஇயல் படிப்பில் இளங்கலை பட்டம் அல்லது தொடர்புடைய படிப்பில் முதுகலை பட்டம் படித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு மற்றும் அரசின் பணியாளர் தேர்வு விதிமுறைகள் அடிப்படையில் இளம் நெறிஞர் (**Young Professional**) நியமனம் நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேற்படி தகுதியுள்ள இளம் நெறிஞருக்கு மாதாந்திர தொகுப்பூதியம் ரூ. 50,000/- (ஐம்பதாயிரம் மட்டும்) வழங்கப்படும் தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் 27.01.2025 தேதிக்குள் தங்கள் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பபடிவத்தினை புள்ளிஇயல் துணை இயக்குநர், மாவட்ட புள்ளிஇயல் அலுவலகம், போஸ் நகர், புதுக்கோட்டை - 622001 என்ற முகவரிக்கு நேரிலோ/ தபால் மூலமாகவோ அனுப்பலாம் விரிவான அறிக்கை விவரங்கள் புதுக்கோட்டை மாவட்ட இணையதள முகவரி **https://pudukkottai.nic.in** மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் எனவும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சியர்
புதுக்கோட்டை

**அறிவிக்கை - Notification**

முதலமைச்சரின் சிறப்புத் திட்ட செயலாக்க அலகு, புதுக்கோட்டை மாவட்டம்

புதுக்கோட்டை மாவட்டத்தில் முதலமைச்சரின் சிறப்பு திட்ட செயலாக்க துறையின்கீழ் , மாவட்ட கண்காணிப்பு அலகில் உள்ள கீழ்க்கண்ட பணியிடத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிவதற்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 27.01.2025 அன்று மாலை 5.00 மணிக்குள் வரவேற்கப்படுகின்றன.

| வ.எண் | பதவியின் பெயர் | எண்ணிக்கை | கல்வித்தகுதி | மாத ஊதியம் |
|---|---|---|---|---|
| 1. | இளம் நெறிஞர்<br>**(Young Professional)** | **1** | **Preferred Qualification:**<br>Bachelor of Engineering in Computer Science/ Information Technology .<br>(OR)<br>Bachelor's Degree in Data Science and Statistics (4 year Course only)<br>(OR)<br>Master's Degree in Computer Science , Information Technology , Data Science , Statistics<br>(OR)<br>Related Course<br><br>**Requirements:**<br>• Strong Research Analytical Skills<br>• Proficiency in Data Analysis Tools (EX: Excel, SPSS, R or Similar) & Microsoft Office Tools.<br>• Ability to Work independently and as part of a team<br>• Persons already having work experience will be given preference | **Rs. 50,000/-**<br>(Consolidated pay) |

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**

புள்ளிஇயல் துணை இயக்குநர்
மாவட்ட புள்ளிஇயல் அலுவலகம்
போஸ்நகர்
புதுக்கோட்டை-622001
மின்னஞ்சல் முகவரி:ddspdk@gmail.com
அலைபேசி : 9445869705

மாவட்ட ஆட்சியர்
புதுக்கோட்டை.

**குறிப்பு:**

1. சுய விவரங்களுடன் கூடிய விண்ணப்பங்கள் தகுந்த ஆவண நகல்களுடன் மேலே குறிப்பிட்டுள்ள மாவட்ட புள்ளிஇயல் அலுவலக முகவரிக்கு 27.01.2025 மாலை 5.00 மணிக்குள் பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

2. இந்த பதவி முற்றிலும் தற்காலிகமானது எந்தவொரு காலத்திலும் பணி நிரந்தரம் செய்யப்படமாட்டாது.